**வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறைகள்.**

பிறப்பிப்பவர்: திருமதி.கா.முத்துலட்சுமி, எம்.எஸ்ஸி (விவ).,

எண். அ3 /13867/ 2018 நாள் 14.02.2023

பொருள் பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி. எம்.விஜயகலா, இளநிலை உதவியாளர் (பிஅ), வேளாண்மை உதவி இயக்குநர், பூச்சிக்கொல்லி ஆய்வகம், கோவை – பணிவரன்முறைப்படுத்தி உத்தரவிடல்.

பார்வை

1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி.6/108857/2018 நாள் 24.10.2018.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அ3/13867/2018, நாள் 20.11.2018.
3. அரசாணை (நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை (க்யூ.1) நாள் 26.02.2021.
4. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண். அநிபி8/158553/2022, நாள் 10.01.2023.

------

உத்தரவு

தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்களின் கட்டுபபாட்டில் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) திருச்செங்கோடு அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் – ஆக பணிபுரிந்த திரு.ப.லட்சுமிபதி அவர்கள் 30.05.2007 அன்று பணியிடை அமரரானார்.

மேற்கண்ட நிலையில்(லேட்) ப.லட்சுமிபதி அவர்களது மனைவி திருமதி.எம்.விஜயகலா, அவர்கள் கருணை அடிப்படைப் பணி நியமனம்-பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியின்கீழ் இளநிலை உதவியாளர் (பிஅ) ஆக பணிநியமனம் செய்து கொள்ள இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 1–ல் காணும் செயல்முறை ஆணையில் பெறப்பட்ட ஒதுக்கீட்டினைத் தொடர்ந்து, திருமதி.எம்.விஜயகலா, அவர்களுக்கு பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி, இவ்வலுவலக கட்டுப்பாட்டில் வேளாண்மை உதவி இயக்குநர், சூலூர் அலுவலக கட்டுப்பாட்டின்கீழ் சுல்தான்பேட்டை வேளாண்மை விரிவாக்க மையத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் (பிஅ) ஆக பணிநியமன ஆணை வழங்கப்பட்டு 28.11.2018 முற்பகல் பணியேற்று தற்போது கோவை பூச்சிக்கொல்லி ஆய்வகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

Scanned with CamScanner

பார்வை 3–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டவர்களுக்கு பணியினை வரன்முறை செய்திட பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் வெளியிடப்பட்டதின் அடிப்படையிலும், பார்வை 4–ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகளின்படியும், திருமதி.எம்.விஜயகலா, இளநிலை உதவியாளர், அவர்கள் பணியேற்ற நாளில் வழங்கியுள்ள மருத்துவ உடல் தகுதிசான்றின்படியும் இளநிலை உதவியாளர் (பிஆ) பதவியில் 28.11.2018 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

(ஒம்)/– கா.முத்துலட்சுமி,
வேளாண்மை இணை இயக்குநர்,
கோவை.

பெறுநர்

திருமதி.எம்.விஜயகலா, இளநிலை உதவியாளர், பூச்சிக்கொல்லி ஆய்வகம், கோவை.

வழி மற்றும் நகல் – வேளாண்மை உதவி இயக்குநர், பூச்சிக்கொல்லி ஆய்வகம், கோவை.

நகல்– வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது (அநிபி பிரிவு).

நகல் – பணிப்பதிவேடு.

நகல் – இருப்பு கோப்பு.

நகல் – உபரி.

// உத்தரவுப்படி //

14/2/23

கண்காணிப்பாளர்.

14.2.23

Scanned with CamScanner